செய்தி இரண்டு

## நம் கலாச்சாரத்தை வாழ்வதற்குப் பதிலாக சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்துவை வாழ்தல்

வேத வாசிப்பு: எபே. 3:11, 16-17; பிலி. 1:20-21; கொலோ. 1:15, 18, 27; 3:4, 10-11

**I. ஒரே புதிய மனிதனாகிய கிறிஸ்துவின் சரீரமான சபைக்காகக் கிறிஸ்துவை நாம் வாழ தேவன் வாஞ்சிக்கிறார் என்பதே வேதாகமத்தின் மைய எண்ணம்—பிலி. 1:21; எபே. 2:15-16:**

A. நாம் கிறிஸ்துவை வாழும்படி கிறிஸ்துவைக்கொண்டு பூரிதமாக்கப்பட்டு, ஊடுருவிப்பரவப்பட்டு, நிரப்பப்பட்டு, தரிப்பிக்கப்பட்டவர்களாக ஆவதே தேவனின் நோக்கம்—3:17; கலா. 2:20; 3:27; 4:19.

B. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கிறிஸ்துவின் விசுவாசிகள் கிறிஸ்துவை வாழ்ந்து, அவரைப் பெரிதாக்கிக்காட்டும் ஒரு வாழ்க்கையாகும்—பிலி. 1:20-21.

C. கிறிஸ்துவை வாழ்வது, ஒரு நபரை, கிறிஸ்துவையே வாழ்வதாகும்—கொலோ. 1:27; ரோ. 8:10:

1. நாம் கிறிஸ்துவை வாழ விரும்பினால், நாம் அவரை நம் நபராக எடுத்துக்கொண்டு, அவருடன் ஒரே நபராக இருக்க வேண்டும்; அவரும் நாமும் ஒரு நடைமுறையான வழியில் ஒன்றாக இருக்க வேண்டும்—1 கொரி. 6:17.

2. நம் அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்து எவ்வாறு இடமாற்றப்படுகிறார் என்பது குறித்து நமக்கு வெளிச்சம் இருந்தால், நாம் கிறிஸ்துவை வாழ்வதற்குப் பதிலாக வேறு பல காரியங்களை வாழ்கிறோம் என்றும், கிறிஸ்துவால் வாழ்வதைவிட கலாச்சாரத்தால் அதிகம் வாழ்கிறோம் என்றும் கர்த்தரிடம் அறிக்கையிடுவோம்—1 யோவா. 1:7.

D. நாம் கிறிஸ்துவைக் கொண்டு கட்டியமைக்கப்படாததே நாம் கிறிஸ்துவை வாழாததற்குக் காரணம்; நாம் எதைக் கொண்டு கட்டியமைக்கப்படுகிறோமோ அதைக் கொண்டே வாழ்கிறோம்—கொலோ. 3:4, 10-11; எபே. 3:17.

**II. சகலத்தையும் உள்ளடக்கிய பரந்தகன்ற கிறிஸ்து கலாச்சாரத்திற்கு எதிர் என்ற காரியத்தைப் பொறுத்தவரை, தம் தெரிந்தெடுக்கப்பட்டு, மீட்கப்பட்டு, மறுபடிஜெநிப்பிக்கப்பட்ட மக்களுக்குள் கிறிஸ்துவில் தம்மையே அடித்துருவாக்குவதே வேதத்திலுள்ள முழு வெளிப்பாட்டின்படி தேவனின் நோக்கம் என்பதை நாம் காண வேண்டும்—கலா. 1:15-16; 2:20; 4:19:**

A. பிரபஞ்சத்திலும், எல்லா யுகங்கள்தோறும், தலைமுறைகள்தோறும் தேவனுடைய மைய வேலை, அதாவது அவரது ஒப்பற்ற வேலை, கிறிஸ்துவில் தம்மையே தம் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுக்குள் அடித்துருவாக்கி, தம்மையே அவர்களுடன் ஒன்றாக்குவதே ஆகும்—எபே. 3:17; 1 கொரி. 6:17.

B. கிறிஸ்துவில் தம்மையே நம்முள் அடித்துருவாக்கி, தம்மையே நம் உள்ளார்ந்த மூலக்கூறுகளாக்குவதே தேவனின் நோக்கம்—எபே. 3:11, 16-19:

C. தேவனுடைய நித்தியப் பொருளாட்சியின் நிறைவேற்றத்திற்காக, தேவன் நம்மைத் தேவத்துவத்திலன்று மாறாக ஜீவனிலும் சுபாவத்திலும் தேவனாக்கும்படி நம் ஜீவனாகவும், நம் சுபாவமாகவும், நம் கட்டமைப்பாகவும், கிறிஸ்துவில் தம்மையே நமக்குள் கட்டியெழுப்பி, கிறிஸ்துவில் தம்மையே நம் ஆள்தத்துவத்திற்குள் கட்ட வேண்டும்—2 சாமு. 7:12-14; ரோ. 1:3-4; எபே. 3:17; யோவா. 14:23; கொலோ. 3:10-11:

1. நம் முழு ஆள்தத்துவமும் கிறிஸ்துவைக்கொண்டு மறுபடி கட்டியமைக்கப்படுமாறு தேவன் கிறிஸ்துவில் தம்மையே நம் உள்ளார்ந்த கட்டமைப்புக்குள் கட்டுவது நமக்குத் தேவை—எபே. 3:17.

2. கிறிஸ்து நம் ஆவிக்குள் வந்து, நம் முழு ஆத்துமாவையும் ஆக்கிரமிக்கும்படி நம் ஆவியிலிருந்து நம் மனம், உணர்ச்சி, சித்தத்திற்குள் தம்மையே பரப்புவதன் மூலம் சபையைக் கட்டுகிறார்—மத். 16:18; எபே. 3:17.

**III. கிறிஸ்து கலாச்சாரத்திற்கு எதிரானவர் என்று கூறுவதில், நாம் நம் கலாச்சாரத்தைக் கைவிட்டுவிட்டு, எந்தக் கலாச்சாரமும் இல்லாமல் வாழ வேண்டும் என்று நாம் கூறவில்லை—கொலோ. 3:10-11:**

A. கிறிஸ்து இல்லாதவர்கள் நிச்சயமாகக் கலாச்சாரத்தின்படி வாழ வேண்டும், ஏனெனில் கலாச்சாரம் மக்களைப் பாதுகாக்கிறது, ஒழுங்குபடுத்துகிறது, அவர்களை மேம்படுத்துகிறது.

B. சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்துவைப் பெறுவதற்கு முன்பு, எல்லாருக்கும் கலாச்சாரம் தேவை.

C. நாம் கிறிஸ்துவைப் பெற்றபிறகு, கிறிஸ்துவை மட்டுப்படுத்தவோ கிறிஸ்துவை அனுபவமாக்குவதிலிருந்தும், அனுபவித்துமகிழ்வதிலிருந்தும் நமக்கு முட்டுக்கட்டையிடவோ நாம் கலாச்சாரத்தை அனுமதிக்கக்கூடாது; மாறாக, நாம் கலாச்சாரத்தின்படி அல்ல, கிறிஸ்துவின்படி வாழ கற்றுக்கொள்ள ஆரம்பிக்க வேண்டும்—2:6-7.

D. குழந்தைகள் வளர்ந்து வருகையில், அவர்களுக்குக் கலாச்சாரமும் பிரமாணமும் தேவை—கலா. 3:23-28:

1. குழந்தைகள் கிறிஸ்துவைப் பெறுவதற்கு முன்பு, அவர்கள் கலாச்சாரத்தின்படியும், பிரமாணத்தின்கீழும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்—வவ. 23-24.
2. அவர்கள் கிறிஸ்துவைப் பெற்ற பிறகு, படிப்படியாக கலாச்சாரத்திலிருந்து கிறிஸ்துவுக்குத் திரும்ப நாம் அவர்களுக்கு உதவ முடியும்—யோவா. 1:12-13; 6:57.

## IV. நாம் கிறிஸ்துவைப் பெற்றுள்ளதால், கலாச்சாரம் அவருக்கு ஒரு பதிலீடாக ஆக நாம் அனுமதிக்கக் கூடாது—கொலோ. 2:6; 3:10-11:

A. ஒவ்வொரு வகையான கலாச்சாரமும் கிறிஸ்துவுக்கு எதிரானது, கிறிஸ்து ஒவ்வொரு வகையான கலாச்சாரத்திற்கும் எதிராக இருக்கிறார்—வ. 11:

1. எந்தவொரு கலாச்சாரமும், அது எவ்வகையான கலாச்சாரமாக இருந்தாலும், அது கிறிஸ்துவுக்கு எதிரானது.
2. கிறிஸ்துவைத் தவிர, நம்மிடம் உள்ள ஒவ்வொன்றும், ஒவ்வொரு மனித உற்பத்தியும், வளர்ச்சியும் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகும்.

B. கிறிஸ்துவின் அனுபவமகிழ்ச்சியின் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் காரணி கலாச்சாரம்; தன்னிச்சையாக, நமக்குள் இருக்கும் கலாச்சாரம் கிறிஸ்துவின் நிஜமான அனுபவத்திலிருந்து நம்மைத் தடுக்கிறது—பிலி. 3:3-9.

C. கிறிஸ்துவை அனுபவமாக்குவதிலிருந்தும், கிறிஸ்துவை அனுபவிப்பதிலிருந்தும், கிறிஸ்துவை வாழ்வதிலிருந்தும் நம் கலாச்சாரம் நம்மைத் தடுத்து நிறுத்துவதால், கர்த்தருடைய மீட்டுத்திருப்புதலில் உள்ள எல்லாப் பரிசுத்தவான்களும் நடைமுறை வழியில் கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாகவும், தங்கள் கலாச்சாரத்தை இடமாற்றும் நபராகவும் எடுக்கக் கற்றுக் கொள்ள நாம் கர்த்தரால் பெரிதும் பாரப்படுத்தப்படுகிறோம்—எபே. 3:17; கொலோ. 3:4.

D. கர்த்தரை அனுபவித்துமகிழ்வதற்கான நமது திறனை விரிவுபடுத்துவதற்காக நம் கலாச்சாரத்தை ஒதுக்கி வைப்பதற்குக் கிறிஸ்துவில் நமக்குச் சுதந்திரம் இருக்கிறது; நமக்குள் இருக்கும் எல்லா அறையும் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

E. நம் முழு உள்ளார்ந்த திறனும் கிறிஸ்துவுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்தால், தன்னிச்சையாக நமக்குள் இருக்கும் கலாச்சாரம் நம்மில் வசிக்கும் கிறிஸ்துவால் இடமாற்றப்படும்—1:27; 3:11.

## V. கிறிஸ்துவின் சகலத்தையும்-உள்ளடக்கிய தன்மையையும், பரந்தகன்ற தன்மையையும் பற்றிய ஒரு தரிசனத்தை நாம் காண்பது முக்கியம்; கிறிஸ்துவின் அத்தகைய ஓர் தரிசனம் இல்லாமல் நம் கலாச்சாரத்தைக் கைவிட நாம் முயற்சிக்கக்கூடாது—அப். 26:19; எபே. 1:17-23:

A. நமக்குள் வசிக்கும் கிறிஸ்து ஒரு சிறிய, வரையறுக்கப்பட்ட கிறிஸ்து அல்ல; அவர் கண்ணுக்குத் தெரியாத தேவனின் சாயலாகவும், தேவனுடைய நிறைவின் ஊனுருவாகவும், தேவனுடைய பொருளாட்சியின் மையக் குறிப்பாகவும் இருக்கிறார்—கொலோ. 1:15, 18; 2:2, 9-10:

1. அத்தகைய ஒரு கிறிஸ்து இப்போது நம்மில் வசிக்கிறார், நம் ஆள்தத்துவம் முழுவதும் தம்மைப் பரப்புவதற்கான வாய்ப்புக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்—1:27.
2. இந்தக் கிறிஸ்து நம் அன்றாட வாழ்வில் எல்லாமுமாக இருக்க வேண்டும், நம் வாழ்வில் எந்தத் தளத்தையும் கலாச்சாரத்திற்குக் கொடுக்காமல் நாம் அவரை வாழ வேண்டும்—பிலி. 1:21; கொலோ. 3:11.

B. சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்துவின் தரிசனத்தை நாம் கண்டவுடன், நாம் நம் கலாச்சாரப் பின்புலத்தை ஒதுக்கிவைக்க ஆரம்பிக்க வேண்டும், அது கிறிஸ்துவை இடமாற்றவோ அவரை மட்டுப்படுத்தவோ அனுமதிக்கக்கூடாது—அப். 9:4-5; 26:19; பிலி. 3:7-10:

1. நம் வாழ்வில் கலாச்சாரத்திற்கு நாம் எந்தவொரு தளத்தையும் கொடுக்கக்கூடாது.

2. அதற்குப் பதிலாக, நமக்குள் இருக்கும் எல்லா அறைகளும் நம்மில் வசிக்கிற சகலத்தையும் உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட வேண்டும்—கொலோ. 1:27.

C. உள்வசிக்கும், சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்துவின் இத்தகைய ஒரு தரிசனத்தை நாம் பார்த்தால், நாம் புறத்தூண்டுதலின்றி நம் கலாச்சாரத்தைக் கைவிடுவோம்—3:10-11:

1. முன்னதாக, கிறிஸ்து கலாச்சாரத்தால் இடமாற்றப்பட்டார், ஆனால் நாம் இந்தத் தரிசனத்தைக் கண்டவுடன், நமக்குள் இருக்கும் கலாச்சாரம் கிறிஸ்துவால் இடமாற்றப்படும்—வ. 11.

2. நம் கலாச்சாரத்தைக் கைவிட முயற்சிப்பதற்குப் பதிலாக, நாம் கிறிஸ்துவை வாழ வேண்டும் அவ்வளவே, இந்தக் கிறிஸ்து நம் கலாச்சாரத்தை தம்மைக்கொண்டு இடமாற்றுவார்—பிலி. 1:21.

D. நாம் கிறிஸ்துவை வாழும்போது, கலாச்சாரத்திலிருந்து புறத்தூண்டுதலின்றி விடுவிக்கப்படுகிறோம், நாம் யாரால் வாழ்கிறோமோ அந்தக் கிறிஸ்து நம் கலாச்சாரத்தைத் தாமே இடமாற்றிவிடுகிறார்; இதுவே கொலோசெயர் புத்தகத்திலுள்ள வெளிப்பாடு—1:15, 18, 27; 2:2, 9-10; 3:4, 10-11.

© 2020 Living Stream Ministry